RECEIVED
1981 -7- 8
LIBRARY

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 26TH JUNE, 1981 No. 26

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

**Subscription**

Inland: Rs. 35/- per year.

Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*
**The Manager,**
'Morning Star', Vaddukoddai.

## University Admissions (Science Faculty) 1981

University admissions to the Science Faculty this year has registered a sharp increase in the number of students admitted to the Science Faculties on considerations *other than merit.*

Except in Colombo and Jaffna where the percentage of concessionary admissions have been 35 per cent and 15 per cent respectively, in all other districts the percentage of low quality admissions have been very high. Even *in Kandy* which cannot be rated as "a deprived district" *only 12* were selected on merit and 100 on basis other than merit. In *Galle*, out of 100 students selected, only 6 were selected on merit and 94 on considerations other than merit.

Whither Science Education in Sri Lanka?

*Memorial Lectures*

O Dr. S. J. Tambiah, of Sri Lanka who is now Professor of Social Anthrapology at Harvard University and who has been elected a Fellow of the American Academy of Arts and Sciences will deliver the *Sir Sarvapalli Radhakrishnan Memorial Lectures* at all Saints College in February 1982.

O *The W. R. Chanmugam Memorial Lecture* will be delivered today by Mr. G. A. C. Sirimanne General Manager, Elephant Lite Corporation.

Mr. W. R. Chanmugam was the first Sri Lankan Government Analyst and President of the Chemical Society of Ceylon. He died early this year.

He is the eldest son of the late Mr. J. K. Chanmugam of Jaffna Central whose name is written large in the educational annals of Jaffna.

*Jaffna College*

## Re-print of Two Books

Two books of great historical value relating to the early history of the American Mission in Ceylon are to be re-printed, according to a decision taken by the Jaffna College Board of Directors.

One is "*A History of the American Ceylon Mission*" (in Tamil) by Rev. C. D. Velupillai — and the other is "*A Century of English Education in Ceylon* by Mr. J. V. Chelliah, a former Vice-Principal of Jaffna College.

The former is the only authentic source of reference of early American Mission activity in Ceylon and the latter is the history of Jaffna College from the time of Dr. Danial Poor and the Batticotta Seminary (1823) to the time when Jaffna College celebrated its Centenary (1923).

*For the Record*

## Jaffna DC Polls—Results

The District Council Elections were held on 4-6-81 but the results for the Jaffna District were announced on *16-6-81.*

| | |
|---|---|
| TULF | — 263,369 votes |
| UNP | — 23,302 " |
| TC | — 21,682 " |
| Ind. (One) | — 4,151 " |
| Ind. (Two) | — 3,455 " |
| Rejected | — 4,328 " |
| Total polled | — 315,999 " |
| Total Registered | — 463,414 " |

## Members of the Jaffna DDC

1. S. Nadarasa (Chairman)
2. S. Nagarasa
3. N. Rasenthiran
4. M. Thambimuthu
5. A. Nadarasa
6. K. Somasundaram
7. J. Soosaipillai Alagiah
8. K. Sinnathurai
9. S. Nadesan
10. S. Poopalasingam

*Church News from Abroad*

**Well Preserved Churches**

The re-opening for worship of a number of Churches from China has posed a number of problems. In Shanghai, the priest told some visitors of the embarassment caused when thousands of barrels of preserved pickles and dried fruits which had been stored in the Church building had to be left on a wharf as there was no alternative warehouse. Church members helped to move the groceries.

**The Church and Tourism**

A Sussex Parish charged 40 Americans £ 200 ($ 440) each for a week's holiday. The result was £ 8000 ($ 17,600) for the Church Roof Fund.

**Death of Ecumenical Pioneer**

One of the last pioneers of the modern Ecumenical Movement passed away recently in France. She is Suzanne de Dietrich (89) who along with Rev. Willem A. Vissert Hooft and Marc Boegner had worked with the Student Christian Movement since 1914. She was on the Staff of the Ecumenical Institute at Bossey from 1946 — 1954 and organised bibilical study seminars along with Hendrik Kraemer in the preparation of the Institute Programme in which many from different countries caught their ecumenical spirit.

## Correction

The last paragraph of our Editorial of 19-6-81 should read as follows: —

"*Tact, it is said,* "*consists in knowing how far we can go too far*" — The misprint is regretted.

## CHUNDIKULI OLD GIRLS RE-UNION

Saturday 25th July 1981

PROGRAMME

| | |
|---|---|
| 3.30 p. m. | Praise Service College Hall. |
| 4.15 p. m. | Business Meeting. |
| 5.00 p. m. | Tea. |
| 6.00 p. m. | Play. |

Annual Subscription Rs. 2-50.

No individual notices.

Husbands of old girls are invited.

**Sita Wijeyarajah**
Hony Secretary.

498/1, Navalar Road,
Jaffna.

*A Church Centenary*

## St. Luke's Church, Borella

The Church of St. Luke, Borella, (dedicated on 30-6-1881) celebrates its Centenary next week. The building underwent extensive renovations in 1941 when Rev. H. Ivan S. Corea was Vicar of the Church.

St. Luke's has played a vital role in making religion, community — oriented. *A Religious Brains Trust* organised in 1950 with Mr. A. M. K. Cumaraswamy as the question master and Messrs C. P. Malalasekara, K. Arulnandhi, F. Rustomjee and Rev. Ivan S. Corea as participants heralded a programme of Inter-religious Dialogue — a subject which today constitutes an important commission of the World Council of Churches.

The Church has always been keenly sensitive to national problems besetting Sri Lanka — the communal canker, the plight of Plantation worker, human rights violations etc., etc.. and has from time to time organised seminars with a view to creating a lively Christian concensus on these national issues.

It is significant that St. Luke's Church invited a Good-Will Mission from the North in 1958 when the present Bishop of Colombo, the Rt. Rev. Swithin Fernando was Vicar of the Church [1958 was the year of communal riot in Colombo under the SLFP government.]

The present Vicar of the Church is Rev. Kenneth Fernando. The Church holds its Special Festival Service tomorrow (27-6-81) at 9 a. m. The Bishop of Colombo will be the celebrant. The preacher at the Service will be Rev. Roger A. Herft, Vicar, Church of St. Mary and StJohn, Nugegoda.

*In brief*

O *The Jaffna Public Library* will be re-opened for use on 3-7-81 in the Jaffna Town Hall. The rooms on the Eastern side of the building (ground floor) has been set apart for the Library.

## "The Greater Gift" By A. J. Cronin

A. J. Cronin, the Scottish Physician turned Novelist, died in January at the age 84 in Switzerland. Cronin is dead but his stories live. They are stories that elevate the mind and ennoble the spirit. One of his best is a story entitled "The Greater Gift", sandwiched within the page of a Novel. Some of your readers would have come across the story while others may not have. I wish to share the story for the benefit of the latter and for my own satisfaction. It has necessarily to be substantially abridged for accomodation in the 'Star'. I hope, however, that I shall be able to do justice to the story.

Once upon a time there lived in the South of Italy two boys who were inseparable friends. One was Mario, son of a wealthy land-owner, the other Anselmo, son of a village cobbler. Mario's parents had destined him for the Church and Mario was not averse to the idea and he was fond of rituals and ceremonies. He aspired to be a great preacher. Anselmo promised, "I will pray, Mario, every day that you may have that gift".

In due course Mario entered the monastery. Anselmo hung about the village for a few lonely months and then, unable to bear the separation, followed his friend to the monastery where he became a lay brother doing the menial duties of the house. Though they were separated for most of the time Anselmo was happy that he was at least under the same roof as Mario.

In the fulness of time Mario was ordained and he was to preach his inaugural serman on Easter Sunday. As Mario mounted the pulpit he saw beneath him, squeezed against the pillar in the corner, Anselmo gazing up at him with expectant eyes. Thus encouraged, Mario gave of his best. It was a spirited sermon which was followed at intervals by sermons of greater fluency and power. Always Anselmo was there in obscurity beneath the pulpit.

Gradually, Father Mario's fame as a preacher grew. Invitations came to him from Churches all over the country. Anselmo accompanied him everywhere. In time Fr. Mario was concecrated Bishop. In his episcopal palace Bisho Mario lived in lordly style. Now he barely designed to notice that submissive, ever-willing little brother who served him with self-effacing docility.

One Sunday, as he preached, Bishop Mario felt a vague deficiency in his surroundings. Gazing dowo he found that Anselmo was not there in his accustomed place. The Bishp faltered and abruptly ended the sermon. He hastened to the sacristy and demanded that Anselmo be sent for at once.

(Cotinned on page 4)

# உதயதாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"


## தாரகை ஒளி

நீதியின் மேல் பசி தாகமுள்ளோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர். — மத. 5:6.


மலர் 141 ] 26 — 6 — 1981 [ இதழ் 26


## ஒரு நல்ல பிரேரணை

யாழ்ப்பாணத்தை மீண்டும் "பயங்கரச் சூறுவளி" தாக்கிவிட்டுப் போய்விட்டது! இயற்கையின் சீற்றமும் அரசியற் சீற்றமும் தமிழ்ப் பேசும் மக்களுக்குச் சர்வசாதாரணமாகிவிட்டன. பனங் காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது என்பது பழமொழி.

ஆனால் தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட இன்னலைப் பார்த்துக் கவலைப்படும் தொகையினர் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இலங்கையில் வாழும் இரு இனங்களும் ஐக்கியமாக வாழவேண்டும், தமிழ் மக்கள் முதற்றர பிரஜைகளாக இருக்க வகை செய்யப்படல் வேண்டும் என்று பலர் பேச முற்பட்டிருக்கின்றனர் வாஷிங்டனிலிருந்து, டோக்கியோ வரை இந்தக் குரல் ஒலிப்பதைக் கேட்கலாம். நீதியையும் நியாயத்தையும் விரும்பும் பல சிங்களப் பெரியார்களும் பௌத்த முனிவர்களும் தமிழ் மக்களுக்காகக் குமுறியெழுகின்றனர். இவையெல்லாம் வரவேற்கப்பட வேண்டியவையாகும்.

இத்தகைய நல்ல பணிகளில் ஈடுபட்டுழைக்கும் அமைப்புக்களிலொன்று **இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கமாகும்.** (MIRJE) 1979-ம் ஆண்டு உதயமான இவ்வியக்கம பல அரிய சாதனைகளை இக்குறுகிய காலத்திற் செய்து முடித்துள்ளது. இந்த வருடம் யாழ்ப்பாணத்தில் அட்டூழியங்கள் ஆரம்பமாகி, அடுத்த நாளே, இங்கு நடைபெற்ற வன்முறைகளைப் பற்றித் துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து, தென் இலங்கையின பிரபல நகரங்களிலெல்லாம் வினியோகித்த பெருமை இந்தக் கழகத்தினருக்குண்டு

இந்தக் கழகத்தினர் சென்ற சனிக்கிழமை (27-6-81) தமது கூட்டத்தினை யாழ். றிம்மர் மண்டபத்தில் நடாத்தினர். யாழ்ப்பாணத்தின் முக்கிய கட்சிகளின் பிரமுகர்கள் பலரும் இக்கூட்டத்திற்குச் சமுகமளித்தனர்

இக்கழகத்தினர், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அட்டூழியங்களையொட்டி, உருவாக்கிய பிரேரணைகளில் சபையோர் கைச்சாத்திட்டனர். அக்கூட்டத்தின் இறுதியில் ஒரு நல்ல பிரேரணையும் நிறைவேற்றப் பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியா கா. சிவத்தம்பி "**யாழ்ப்பாண சம்பவங்கள் தொடர்பாக நீதி கோரித் தொண்டாற்றும் சகல அமைப்புக்களுக்கும் மக்களுக்கும் இக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றது**" என்ற பிரேரணையைக் கொண்டு வந்தார். பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

இது இன்று நமது இன்னல்களைப் பார்த்து அவற்றினைக் களைந்துவிட முயற்சியெடுக்கும் ஸ்தாபனங்கள் யாவற்றுக்கும் நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம் என்பதனை அறிவிக்கின்றது. மேலும் பிற இனத்தவர்களின பணி நமக்கு அவசியம்; அவற்றினை நாம் விரும்பி வரவேற்கின்றோம் என்பதனையும் உணர்த்தி நிற்கின்றது பல எதிர்ப்புகளின் மத்தியில் நமக்காகப் பலர் குரல் கொடுத்து வருகின்றனர். அவர்களில் எத்தனை பேரை நாம் சந்தித்திருக்கிறோம்? நீதிக்கும் நியாயத்திற்கும் போராடுபவர்கள் பேறுபெற்றோர் என்கின்றது திருமறை. அவர்களைப் போற்றி அவர் வழியில் நடப்பது இன்று நாம் செய்ய வேண்டிய **தலையாய கடமை.**

## செய்திகள்

### அவுஸ்திரேலியாவில் இனநாசக் குற்றச்சாட்டு

அவுஸ்திரேலியாவின் பூர்வக் குடிகளை அழிப்பதற்கேதுவான இனநாசக் கொள்கையொன்றை பிரதமர் மால்கொம் பிறேசரின் அரசாங்கம் கடைப்பிடித்துக் கொண்டுவருகிறதென்றும் இப்பூர்வ சனங்களின் சரித்திரம் கலாச்சாரம் ஆகியவற்றோடு அவர்களின் சுகாதாரம், சமுதாய, அரசியல் வேட்கைகள், காணி உரிமைகள் அனைத்துமே தேடுவாரற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுப் போகின்றனவென்றும் சர்வலோகத் திருச்சபைச் சங்கத்தின் இன வேறுபாட்டொழிப்புத் திட்டத்தின் காரியத் தலைவரான பேராசிரியர் அன்வர் பர்காதி அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளார்கள்.

அவுஸ்திரேலியாவின் பூர்வக் குடிச் சனங்களின் நிலைகளை விசாரித்தறியும்படி ச. லோ. திருச்சபைச் சங்கத்திற்கு அவுஸ்திரேலிய திருச்சபைச் சங்கம் விடுத்த அழைப்பின் பேரில் அங்கு அனுப்பப்பட்ட பேராசிரியர் பர்காதி அவர்கள் தமது அறிக்கையில் மேலுங் கூறியது: தமது நாட்டிலேயே இன வொடுக்கம் தலைவிரித்தாடும்போது பிரதமர் பிறேசர் தென் ஆபிரிக்காவின் இனவொடுக்கச் செயல்களைக் கண்டிக்க அவருக்கு எவ்வித உரிமையுமில்லை. பூர்வக்குடிகளுக்கான சில திட்டங்கள் அவுஸ்திரேலியாவில் இருப்பது உண்மையே. ஆயினும் இவை அரசாங்கத்தின் மனதைச் சாந்தி பண்ணக் கொடுக்கப்படும் துணிக்கைகளே யல்லாமல் வேறல்ல.

### பதவித் துர்ப் பிரயோக விசாரணை

தமது பதவியின் செல்வாக்கைத் துர்ப் பிரயோகம் செய்து தகாதவைகளைச் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் பொத்துவில் தொகுதியின் முதலாம் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் M. A. M. ஜலால்தீன் அவர்களுக்கு எதிரான விசாரணை ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்றினால் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

மொகமட் காசிம் ஆதம் பாவா என்ற ஆசிரியரை அரசியல் சார்ந்த எதிர்ப்புக் காரணமாய்ப் பல தடவைகள் இடமாற்றம் செய்வித்தனர் என்றும் நிந்தாவூர் ப. நோ. கூட்டுறவுச் சங்க நடத்துனர் ஒருவர் ஈடுபட்டிருந்த மோசடியை மூடி மறைக்க முயற்சித்தனர் என்றும் இவரிற் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. அரசாங்க தரப்பினர் ஒருவருக்கு விரோதமாக விசாரணை நடத்துவிப்பது இதுவே முதற் தடவையாகும், இதைத் தொடர்ந்து சென்ற அரசாங்கத்தின் அமைச்சர் ஹெக்டர் கோபெக்கடுவா அவர்களுக்கு எதிரான விசாரணை எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

### யாழ்ப்பாணத்தில் வன்செயல்கள் 300

இந்த மாதத்தின் முதல் மூன்று நாட்களிலும் யாழ்ப்பாணத்தில் கடைகளுக்கு தீ வைப்பதும் சூறையாடுவதுமான 300 வன்செயல்கள் இடம்பெற்றதாகப் பொலிசார் வெளியிட்டுள்ளனர். சென்ற வாரத்தில் வியாபாரிகள் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திற் செய்த முறைப்பாடுகளைக் கொண்டே இந்தக் கணக்கு எடுக்கப்பட்டுள்ளது. இவ்வகையாக முறைப்பாடு செய்த ஒவ்வொருவருக்கும் அந்த முறைப்பாட்டின் பிரதியொன்று கொடுக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட ஒரு விசேட விசாரணைக் குழு இம் முறைப்பாடுகளைக் கேட்டுப் பதிவு செய்துள்ளது. முறைப்பாடுகளைக் கொடுத்தவர்கள் முப்பது பொலிஸ் உத்தியோகத்தர்களை அடையாளம் கூறினர். இவர்களில் ஒரு சிலர் உதவி இன்ஸ்பெக்டர் பதவியிலுள்ளவர்கள். மற்றவர்கள் சாதாரண காவலர் எனக் கூறப்படுகிறது. குற்றங் காணும் பட்சத்தில் இவர்களுக்குக் கடுந் தண்டனை அளிக்கப்படும் எனப் பொலிஸ் வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

சூறையாடியவர்களிற் சிலர் பொதுமக்களெனவும் அவர்களிடமிருந்து பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட விலையுடைய தங்க நகைகள் முதலான சூறையாடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டுள்ளனவென்றும் ஒரு செய்தி கூறுகின்றது. இந்தத் தீவைப்பு, சூறையாடல் சம்பவங்கள் பிரதானமாக யாழ். நகரிலும் சுன்னாகம், காங்கேசந்துறைப் பொலிஸ் வட்டாரங்களிலுமே நடந்துள்ளன. இஃதிவ்வாறாக, பொலிஸ் விசாரணைக் குழு யாழ்ப்பாணத்து வன்செயல்கள் சம்பந்தமாய் நடத்திய விசாரணைகளைத் தொடர்ந்து இவைகளிற் சம்பந்தப்பட்டவர்களெனச் சந்தேகிக்கப்பட்ட ஐம்பது பொலிஸ் உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் எக்காரணங்கொண்டும் இவர்கள் வருங்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சேவை செய்ய அனுப்பப்பட மாட்டார்களெனவும் உத்தியோக பூர்வமான ஒரு செய்தி அறிக்கை வெளியிட்டுள்ளது.

## செய்திகளின் சாரம்

### லண்டன் — குற்றச் செயல்கள் அதிகரிப்பு

1979 ஆம் ஆண்டை விட 1980 ஆம் ஆண்டில் அடிபறியும் கொள்ளையும் 20 சதவீதம் அதிகரித்தது எனப் பொலிஸ் ஆணையாளர் கூறியுள்ளார். அடிபறிக் குற்றங்களிற் பிடிபட்டவரில் 60 வீதமானோரும் திருட்டுக் குற்றத்தில் பிடிபட்டவரில் 67 வீதமானோரும் 21 வயதுக்குட்பட்டவர்கள் எனக் கூறப்படுகிறது.

* * *

### பானி — சாடர் வேலை நீக்கம்

ஈரானிய அரசாங்கத்தின் இஸ்லாமியத் தீவிரவாதப் போக்கை எதிர்த்து நடுவழியைக் கையாண்டு கொண்டு வந்த ஈரானிய ஜனாதிபதி பானி— சாடர் புரட்சித் தலைவர் ஐயற்றுல்லா கோமினியினால் பதவியிலிருந்து நீக்கப் பட்டுள்ளார். இவரைக் கைது செய்யும் படி கட்டளை பிறப்பிக்கப் பட்டுள்ளது. ஜூன் 11ஆம் திகதியிருந்து ஜனாதிபதி தலைமறைவாகியுள்ளார்.

* * *

### நேரடித் தொலை பேசித் தொடர்பு

பல கோடி ரூபா செலவில் இலங்கை முழுவதுக்குமான நேரடித் தொலைபேசித் தொடர்பு இணைக்கும் திட்டம் ஒன்று இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளது. 1983 ஆம் ஆண்டில் இதற்கான வேலைகள் பூர்த்தியடையும் எனக் கூறப்படுகிறது. இதற்கான செலவுகளை உலக வங்கி கொடுத்துதவும்.

* * *

### மா. அ. ச. தேர்தல் வழக்கு

சமீபத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களுக்கு எதிராக அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளது. கட்சி முதல்வர் திரு. S. R. கனகநாயகம் தலைமையில் சமீபத்தில் நடந்த நிர்வாகக் குழுவின் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

* * *

### பிரிவுக்குத் தடை?

நாட்டின் எந்தப் பகுதியையாவது பிரிக்க முயல்வது உட்படப் பல நாட்டு நலனுக்கு எதிரான காரியங்களில் எவரும் தனியாகவோ ஒரு கூட்டமாகவோ ஈடுபடுவதைத் தடுக்கும் சட்டமூலத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவது பற்றி அரசாங்கம் ஆலோசிப்பதாக ஒரு செய்தி அறிக்கை கூறுகிறது. அமைச்சரவையில் பலர் இதற்குச் சார்பாகவும் சிலர் எதிராகவும் இருப்பதாகத் தெரிகிறது.

* * *

### ஒரு விநாடி கூட

இந்த வருடம் ஜூன் மாதம் 30ஆம் திகதி ஒரு விநாடியளவு கூடியதாயிருக்குமென அமெரிக்க வர்த்தகத் துறை கணக்கிட்டுக் கூறியுள்ளது. பூமியின் சுழற்சி வேகத்தில் ஒரு சிறிதளவான வேறுபாடு ஏற்பட்டுக் கொண்டே வருகிறதென்றும், தற்கால விஞ்ஞான அலுவல்களுக்காய் உபயோகிக்கப்படும் அணுசக்திக் கடிகாரங்கள் இப்படியான வேறுபாடுகள் இல்லாத அளவிற்கு இயங்கி வருவதாலேயே இம் மாற்றத்திற்கு இடமளிக்கப்பட்டுள்ளதெனவும் விளக்கம் தெரிவிக்கப்படுகிறது. செவியை மறைத்த கொம்பு போலாகியதோ என நாம் வியப்படைகிறோம்.

## கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாட்சிமை

( சென்ற வாரத் தொடர்ச்சி )

அவருடைய போதனைகள் மற்றவர்களின் போதனைகளுக்கு வித்தியாசமாகவே காணப்பட்டன. இப்படியாகலாம், அப்படியாயிருக்கக் கூடும் என்று சொல்லாமல் அவருக்குப் பரதிலிருந்து கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் படி போதித்தார். மத்தேயு 5:20, 22, 28, 32, 39 44 முதலாய வசனங்கள் இதைத் தெளிவுறுத்துகின்றன. அவருடைய முக்கிய விடயம் என்னவென்றால் 'தேவன் அன்பாகவே இருக்கிறார்', என்பதே. தேவன் நமது தந்தை. நாம் அவரின் பிள்ளைகள் ஆதலால் நாம் அவருக்குரியவர்கள். மனுசிகஜாதி ஒரே குடும்பம். இக்குடும்பத்தின் தலைவன் நமது பரமதந்தை. எல்லா மக்களும் சகோதர சகோதரிகள். எங்கள் சொந்தம் எங்கள் பரம பிதாவுடன் பாராட்டப்படும் போது இப்பந்தத்திற்குரிய பொறுப்புகளும் நமக்குண்டு. நமக்குள்ள பொறுப்புகளின் படி நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாயு மிருக்கிறோம்.

II அவரின் அதி உன்னத வாழ்க்கை :-

(1) அவர் தமது வாழ்க்கை முழுவதையும் தேவனுடைய சித்தத்திற் கென்றே அர்ப்பணித்து வாழ்ந்தார். தான் உலகத்தில் வாழ்ந்த நாட்களில் (தேவனின்) சித்தத்தைப் பரிபூரணப்படுத்துவதே அவரின் நோக்கமாயிருந்தது. இயேசுக் கிறிஸ்து நாதர் பன்னிரண்டு வயதாயிருந்த போது அவரின் தாயார் அவரைக் காணவில்லை என்று தேடி அங்கலாய்த்த போது இயேசு தாயாரைப் பார்த்து, "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக் கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?' என்றார் என லூக்கா 2:49ல் வாசிக்கிறோம். தேவனுடைய சித்தத்திற் கமைந்து நடப்பதையே அவர் தமது குறிக்கோளாய்க் கொண்டிருந்தார் என்று நாம் அறிகிறோம்.

இயேசுக்கிறிஸ்து நாதர் கடைசி முறையாக எருசலேமுக்குப் புறப்படுகையில் பேதுரு அவரைக் கடிந்து கொண்டு அவரை அங்கே போக வேண்டாமென்று மறித்த போது இயேசுவானவர் பேதுருவைப் பார்த்து, 'எனக்குப் பின்னாலே போ சாத்தானே' என்று கூறியதாகவும் உயிர் போவதாயிருந்தாலும் நான் எருசலேமுக்குப் போக வேண்டும்; அது தமது பரம பிதாவின் சித்தம், என்று சொல்லி துணிந்து புறப்பட்டார் என்றும் மத்தேயு 16:23ல் காண்கிறோம்.

சிலுவையிலறையப் படுவதற்குச் சற்று முன்பதாகவே, அவர் கெத்சமனேதோட்டத்தில் ஜெபித்த விதத்தைப் பார்த்தால் லூக்கா 22:42ல் நாங்கள் காணுவது போல 'பிதாவே உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும் படி செய்யும். ஆயினும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது' என்று ஜெபம் பண்ணினார்.

இது எல்லா மனிதரும் அறிந்து கடைப்பிடிக்க வேண்டிய ஓர் உண்மையான முறை. மனிதன் தேவனுக்குரியவன். தேவனே மனிதனை உண்டாக்கினவரும் வாழப் பண்ணுகிறவரும். ஒரு மனிதன் பிறப்பதற்கு முன்னரே அவனுக்காகிய ஒரு பரிபூரண திட்டம் தேவனால் வகுக்கப்பட்டுள்ளதென்று ஏசாயா தீர்க்கதரிசி தனது புஸ்தகம் 44:2; 49:1.ல் கூறியிருக்கின்றார். தேவன் ஒரு தொல் பொருளியலாளர். மனிதன் தனது வாழ்க்கையில் அவருடைய சித்தத்திற்கிசைந்து நடந்து அவர் போட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதே மனிதன் செய்யவேண்டிய கடமை.

(2) அவர் மற்றவர்களின் நன்மையைக் கருதினார். பிறரின் நன்மைக்காகவும் பிறர்மேல் அவர் கொண்ட பெரிய அன்பிற்காகவும் தமது சொந்தச் சீவனையும் அர்ப்பணிக்க அல்லது தத்தஞ் செய்யத் தயாராயிருந்தார்.

அநேக சனங்கள் சுயநலவாதிகளாகவும் தங்கள் சொந்த வாழ்க்கை, சொந்தத் தேவைகளைப் பற்றியே அக்கறை கொண்டவர்களாயு மிருக்கிறார்கள். இப்பிழையான மனோபான்மை சில குடும்பங்களுக்கிடையில் உள்ள அங்கத்தவர் மத்தியிலுமுண்டு. தங்கள் சொந்த சந்தோஷம், நன்மை முதலியவற்றைக் கருதியவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் பிறருடைய நன்மைக்காக, பிறருடைய முன்னேற்றத்திற்காக ஒருவன் பாடுபட்டு அயராமல் உழைப்பானேயானால் அங்கு மாண்பு மிகு மாட்சிமை பிறக்கும். இயேசுவின் மாட்சிமை அவரின் வாழ்க்கையில் அவர் மற்றவர்களுக்காகக் காட்டிய அக்கறையில் காணப்படுகிறது. பசித்து வாடிய மக்களை அவர் கண்ணுற்றபோது, நோயால் வாடினவர்களைக் காண்கையில், இயேசுக்கிறிஸ்துநாதர் "மனதுருகினார்" என்ற வார்த்தை வேதத்திற் பல இடங்களிற் பாவிக்கப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம். மத்தேயு 14:14; 15:32; 20:34; 23:37; மாற்கு 1:41; லூக்கா 7:13; யோவான் 11:35; முதலிய வசனங்கள் இயேசுவின் மன உருக்கம் பசிக்கும், நோய்க்குமாக மாத்திரம் இல்லை; ஒரு மனிதனின் முழுமையைக் குறித்தும் ஆதாவது சரீரம், மனம், ஆத்மா மூன்றின் முழுமையைக் குறித்து மனமுருகினார் என்று காட்டுகின்றன. தேவன் மனிதனின் முழுத் தேவைகளும் பூரணமாக்கப்படாவிடின் அவனின் வாழ்க்கை ஒரு ஒடிந்த வாழ்க்கையாகும் என்பதைக் காட்டினார். இயேசுவானவர் எப்பொழுதும் தனது வார்த்தைகளில் 'பிணியாளி' 'சுகமுள்ளவன்' என்ற பதங்களை மத்தேயு 9:12; 5:31-34 மாற்கு 2:17; 5:31-34; லூக்கா 5:31. முதலிய வசனங்களிற் பாவித்திருக்கிறார்.

இரண்டு பாதங்களும் இரண்டுகைகளும் சிலுவையில் ஆணிகளாலடிக்கப் பட்டுத் தொங்கிக் கொண்டிருந்த நிலையிலும் தன்னிரு பக்கங்களிலும் அறையப்பட்டிருந்த கள்வருக்காகவே இயேசு ஜெபித்தார். தனது நோ, பசி, காயங்களைப் பொருட் படுத்தாமல் பிறர் கவலைகள், பாடு முதலியவற்றிற்காகவே கரிசனை கொண்டு மனதுருகினார்.

(3) பிறம்பாக்கப்பட்டு "தீண்டப் படாதவர்" என்று பிரித்து வைக்கப்பட்ட மக்கள் மேல் இயேசு அதிகம் இரக்கங் காட்டினார். எல்லோரையும் ஒரே தேவனின் மக்கள் என்றே மதித்தார். மனிதர் இன்ன விதமாய் இருக்கிறார்கள் என்று கணியாமல் அவர்கள் தேவனுடைய ஐக்கியத்திற்குட் படுகையில, தேவனுடைய ஆளபபடுகையில் எவன் விதமாய் ஆகுவார்கள், எவவ விதமாய் தேவனின சித்தத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்றக் கூடியவர்களாவாரகள என்றே கருதினார்.

யூதர்கள் தங்கள் சாதிக்குள்ளேயே சிலரை பாகு பாடுபண்ணி அப்பாகு பாட்டிற் குரியவரைத் தங்களிலும் தாழ்ந்தோர் என்று புறக்கணித்து வைத்தார்கள். இவர்களை 'இழிவானவர்கள்,' 'அசுத்தமானவர்கள்' என்று பிரித்து வைத்தார்கள்.

(தொடரும்)

[ குறிப்பு :- "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின மாட்சிமை" என்ற ஆங்கிலக் கட்டுரையைத் தமிழாக்கம் செய்தவர் திருமதி இசபேல் அற்புதநாதன். சென்ற இதழில் இன்பநாதன் எனப் போட்டிருப்பது தவறு. பிழைக்கு வருந்துகிறோம. ப-ர். ]

## புதிய சீனவில் புத்துயிர் பெறும் திருச்சபை

[ 19-6-81 இதழ்த் தொடர்ச்சி ]

இருக்கும் சூழ்நிலையில் சீனக் கிறிஸ்தவர்களின் முதற்கரிசனை கம்யூனிஸ்ட் கொள்கைகளை ஏற்றுக்கொள்வதோ, தள்ளி விடுவதோ என்பதல்ல; தம் உடன் சீனமக்களாகிய (கிறிஸ்தவரல்லாத) பிறருடன் எப்படி ஒன்று பட்டிருக்கலாம், தம் சுயதேசமாகிய சீனவுக்கு உரியவற்றை எப்படிக் கொண்டிருக்கலாம் என்பதே. கிறிஸ்தவ செய்தியைப் பரப்புதல், சபையாரைப் பராமரித்தல், குருமாரையும் அதிட்சதத் தலைவர்களையும் பயிற்றுதல் முதலிய அத்தியாவசியக் காரியங்களிலேயே சீனத் திருச்சபை இப்பொழுது ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. எனினும் தாம் முன்பு பழக்கப்பட்டிருந்த முறைகளை விடத் தற்காலத்துச் சோஷலிச முறையே கிறிஸ்தவக் கொள்கைகளுக்கும் போதனைகளுக்கும் மிகக் கிட்டியது எனத் திட்டவட்டமாய் நம்புகிறார்கள். ஐசுவரியவான் பரலோக ராஜ்ஜியத்திற் பிரவேசிப்பது மிகக்கடினம் என இயேசு கூறியதை இப்பொழுது தான் விளங்கிக் கொள்ளக் கூடியதாயிருக்கிறது எனப் பலரும் சொல்லுவார்கள். மேசு ஆன் ஆலயத்தைச் சேர்ந்த ஒரு குருவானவர் இதை இன்னும் வலியுறுத்திப் பின்வருமாறு கூறினார்:

"மார்க்ஸியத்தின் கொள்கைகள் அனைத்தையும் என்னால் விளங்கிக் கொள்ள முடியாது; ஆனால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சீன மக்களுக்குச் செய்துள்ளவை சீனவில் கடவுளின் ராஜ்ஜியம் வருவதைத் துரிதப்படுத்தியிருக்கின்றன என்பதே என் சிந்தனை. முன்னே மனிதருடைய நிலை பரங்கள் மிகவும் மோசமானவை... இப்பொழுதோ இவையாவும் மாறிப்போயின. பிச்சைக்காரர் இல்லை; குதிரைப் பந்தயங்கள் நடத்தப் பட்ட இடம் ஆப்போ பூங்கா ஆகிவிட்டது: குற்றச் செயல்கள் மிகவும் குறைந்து விட்டன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை உபயோகித்து இந்தளவு நல்ல காரியங்களையும் கடவுள் சீனவிற் செய்தமைக்காய் அவருக்கு நன்றி கூறுகிறேன்."

சீனவின் புரொட்டஸ்தாந்து சபைக்கு உதவிக்கரம் கொடுத்துக் கொண்டிருப்பது "மூன்றும் சுயவாழ்வியக்கம்" (Three-Self Movement) இது, பலர் சிந்திப்பது போல, ஒரு உயர்ரகத் திருச்சபை அல்ல. இது சபைகளுக்குதவியான ஒரு இயக்கம் மாத்திரமே. இதன் பிரதான வேலைகள் : ஒரு இறையியற் கல்லூரியை அமைத்துக் குருமாரைப் பயிற்றி விடுதல், சகலர்க்கும் பொதுவான வழிபாட்டு ஒழுங்கு ஒன்றைத் தயாரித்தல், வழிபாட்டிற்கும் படிப்புகளுக்குமுரிய நூல்களைத் தயாரித்து வெளியிடுதல் முதலியனவாகும். இது இன்னுமொரு வகையிற் கடமையாற்றும், அரசாங்கத்தின் மார்க்க விவகாரப் பிரிவுடன் தொடர்பு கொண்டிருந்து, முந்திய அரசாங்கத்தினால் சுவீகரிகப்பட்டிருந்த ஆதனங்களையும் கட்டடங்களையும் திருப்பிப் பெறுவதற்கான முயற்சி எடுத்தல் அவ்வாறுப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்களுக்கான வாடகைப் பணங்களைப் பெற்றுச் சபைகளுக்குக் கொடுத்தல், கிறிஸ்தவர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் எழக் கூடிய பிரச்சனைகளில் மத்தியஸ்தம் பேசுதல் — இப்பேர்ப்பட்ட காரியங்களையும் இவ்வியக்கம் கவனித்துக் கொள்ளும்.

கலாச்சாரப் புரட்சியினால் திருச்சபை அழிந்து போகாமல் இருந்ததற்கு இரண்டு காரணிகளைக் கூறுவார்கள்: ஒன்று சீனக் கம்யூனிஸ்ட கட்சியின் கொள்கைகள்; மற்றது மூன்றும் சுய வாழ்வியக்கம் உண்டுபடல். இந்த இயக்கம் அரசாங்கத்தின் ஓர் ஏவுகணை யெனப்பலரும் தவறாகச் சிந்திக்கிறார்கள். அப்படியல்ல, அரசியல் நியாயங்களையிட்டுச் சிலர் இவ்வியக்கத்தை எதிர்க்கிறார்கள் என்பது உண்மையே. இவர்கள் ஒரு "சபை" அல்ல; தனியாட்கள் மாத்திரமே. "வீட்டுச் சபைகள்" எனப்படும் பல கூட்டத்தினரும் இந்த இயக்கத்திற் கூடாகவே சுவீகரிக்கப்பட்ட தமது ஆலயக் கட்டடங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த வீட்டுச் சபைகளைச் சேர்ந்தவர்களில் பலர் ஆலயங்களில் நடக்கும் வழிபாட்டிற்கு வருவதில்லை. ஆலயங்கள் நிரம்பியிருப்பதாலோ, பிரயாணம் செய்ய வேண்டிய தூரம் அதிகமாயிருப்பதாலோ, அல்லது வயது சென்றவர்களாய் நோய் வாய்ப்பட்டிருப்பதாலோ இவர்கள் வீடுகளில் (அயலகத்தார் பலர் சேர்ந்து) நடத்தப்படும் வழிபாடுகளையே விரும்புவர். இவர்களுங்கூட ஆலயங்களிற் கடமையாற்றும் குருமாரின் உதவியைக் கேட்டுப் பெற்றுக் கொள்வர். போதியளவு குருமார் இல்லாததால் இந்த வீடுச்சபைகள் அனைத்தையும் பராமரித்து நடத்துவது முடியாத காரியம். எனினும் இந்தக் குறையை நிவிர்த்தி பண்ணும் திட்டங்களை வகுக்கக் காத்திருக்கிறார்கள்.

( தொடரும் )

*EDITORIAL*

## A Significant Milestone

Though bereft of fanfare or pageantry, in conformity with the mood of the time, the Tenth Anniversary of the Consecration of our Bishop, the Rt. Rev. D. J. Ambalavanar, which we, as a Diocese, observe on 30-6-81, needs more than a passing mention.

Bishop Ambalavanar was the first Bishop of the C. S. I. to be consecrated *in* Jaffna.

We remember the day vividly when the large congregation at the Cathedral Church, Vaddukoddai which had over flowed into the lawn outside (where benches had been placed under the spreading shade of the margosa trees) had to wait for some hours patiently for the arrival from India of some of those who were to participate at the Consecration Service, one of whom was the General Secretary of the Synod.

The party did arrive and the Service Order went through with every part conducted as stipulated in the Programme.

We have not gone very far in time from those days when a tentativeness and timidity crippled every aspect of our national life in Sri Lanka. "The only thing certain in our country" quipped one of our former missanaries just before he left our shores for good, "was that everything is uncertain".

1981 sees the Christian Church facing greater challenges than it did in 1971.

Our own Bishop's tenure (of a decade) is sandwiched between two insurrections that rocked this country. The latter—the 1981 "insurgency"—has affected not merely our economy but endangered in a startling manner the whole human relationships between the two major communities, who have made this country their motherland, each in its own right.

"We are not fighting for *separation*, we are only fighting for our *land*" is the anguished cry of one of the accredited political leaders of the Tamil speaking minority in this country.

As a Christian Church in Sri Lanka how shall we position ourselves in the light of the new shadows that have fallen on our land in recent weeks.

It is relevant here to mention that the contribution that our Bishops in Sri Lanka have made to the life of the nation, particularly the alertness they have instinctively displayed, in all crisis situations in this country, have been a great source of strength to the people of this island particularly those who have been involved in the disasters and devastation.

We read that a team of church people from six nations will arrive in Australia during the *first week of June* to start a visit which will focus new international attention on the conditions of Australian Aborigines.

It is an event which symbolises the increasing awareness of the Churches of all traditions in a wide range of concerns for the rights of all people to enjoy the fullness of life that God wills for the whole human family.

Broadening the struggle for human rights to include in it not only civil rights but political systems that shape *the cultural identity and dignity of peoples*, is an issue which is clearly related to the fundamental tenets of the Christian faith.

The contemporary political climate in Sri Lanka today remains to the Christian Church its most punishing adversary.

## DISTRICT DEVELOPMENT COUNCILS

*by* **Professor A. J. Wilson**

*( Continued from last issue )*

Professor W. H. Morris Jones has remarked in regard to India in his *The Government and Politics of India*:—

> each State Minister will of course have official dealings with the appropriate minister at the Centre and some will be more effective than others in pressing their claims. But in most States the Chief Minister is the key figure in relations with the Centre. His officers and ministers will be to and fro to New Delhi often enough but their difficulties and unfinished business of importance will be gathered up in the Chief Minister's file for discussion with New Delhi.

For State Minister, we will have to substitute the member of the Executive Committee and for Chief Minister, the appropriate equivalent is the Chairman of the District Development Council.

The opportunity for bargaining co-operation and effecting compromises is available in other provisions in the District Development Councils Act. Section 26 empowers the Cabinet of Ministers to allocate funds to a District Development Council. Funds can only be obtained when there is the spirit of give and take. Sections 27 and 30 give a District Development Council the right to raise loans but these will have to be authorised by the Minister in charge of Development Councils and the Minister of Finance. It will be up to the xecutive Committee and the Chairman of the Council to persuade, co-operate and bargain with these Ministers. Section 48 authorises the President of Sri Lanka to appoint the key official of a district, the District Secretary. The Section however states that the President may, where he considers it necessary, consult with the Chairman of the Council when he makes this key appointment. A resourceful Chairman will be able to persuade the President to appoint ths person whom he wants. Nevertheless even if the District Secretary is an appointee not acceptable to a Chairman, such a District Secretary will, in terms of Section 48 (1) of the Act, be subject to the direction of the Executive Committee. Finally there is the question of the appointment of a District Minister. Although the appointment of Ministers including District Ministers, is, in terms of the Constitution, a matter within the sole and unfettered discretion of the President of Sri Lanka, a District Development Council and its Chairman can again by wise and careful negotiation secure a District Minister acceptable to the Council. It will be up to the Council and its Chairman to provide the necessary co-operation to obtain an appropriate District Minister. The politics of the new system, in fact, provides the opportunity for the proper selection of such a minister.

The conclusions that can therefore be drawn from the interpretations made here about the District Development Councils system are that

1. The system does not, in the context of political science lend itself to ready classification. It is not federal though it has some of the characteristics of federal systems of government. It is not also federal in the sense that, in certain respects, the District Development Councils have greater advantages than, for example, the States in the Indian and Malaysian federations. It is not quasi - federal because it can be said to have in it features that make it more than quasi - federal.

2. The system cannot be termed unitary. Legally and constitutionally it might be argued that the central government has, in the end the ultimate power. But this is also largely true of the Indian and Malaysian Federations if their day to day workings are closely examined. And this also applies to the older federations because of the increasing dependence of the states of their federal governments for financial assistance.

3. The system has in it definite built-in devices designed on the presupposition that there will be a great deal of give and take, many bargains and more compromises. If healthy conventions are evolved, it can even develop the characteristics of rigid federal systems of the old classical style. District Development Councils are therefore *sui generis* (a structure of its own kind).

4. *If properly worked*, the system can, for the Tamil people, achieve the advantages of a separate and meaningful existence within which the Tamil language and Tamil culture can be preserved and protected and the economy of the Tamil-speaking peoples developed so as to make them less dependent on government service and less inclined to migrate to the sinhalese provinces to find their daily means of livelihood. In effect, the system is unique in that it could be made to work in a way so as to enable the Tamil-speaking peoples to live in self-assured and peaceful coexistence with the sinhalese people.

*( Concluded )*

*IN BRIEF*

O *Christian Civilisation* — The Jaffna University Course in Christian Civilisation as a subject for the Degree Examination has had a good response. The enrolment from seven has now shot up to 22 and with the next Academic year commencing in October, the number is expected to increase.

O *The North Colombo Medical College* (NCMC) at Thalagolla, Ragama is expected to be formally declared open on 26-9-81 by President Jeyawardene. Dr. G. M. Heennilame will be Chairman of the Board of Governors. 120 students have been enrolled. This number includes 20 foreign students some of whom are children of Sri Lankan expatriates. The course will begin in the first week of October after an eight week *Orientation Course* to the students on Sri Lanka, — its history, its cultures and the major agricultural and industrial schemes in the country.

### 'The Greater Gift"
### By A. J. Cronin

*( Continued from page 1 )*

"He died a quarter of an hour ago" was the shocking reply. For months he was suffering from an incurable illness but did not wish to trouble the Bishop with the knowledge of it. The Bishop wanted to be taken to him. He was led out behind the stables to a small cell where on a straw covered plank bed lay all that was mortal of Bishop Mario's boyhood friend. "This is where he lived?" "Yes my Lord". And how did he spend his days?" "He served you". "But beyond that?" "Everyday in the garden he fed the birds from his own platter. He spoke often to the little children at the palace gates. And then......... he prayed". The Bishop's expression was inscrutable, but a knife was striking at his heart. His manner towards Anselmo in these last years had been haughty.

The Bishop then left for Rome where, in St. Peter's, he was to preach before a gathering of arcbbishops. When he began to speak he faltered again. Words issued haltingly from his lips. In despair he glanced beneath him. And of course Anselmo was not there. In confusion, Mario struggled through his sermon. Hot with shame he left the precincts of St. Peter's.

Deeply injured he set to work to prepare his next sermon with meticulous care. However, when he came to deliver the address he failed again. He muttered, "It is true...... he was the substance ......... I am the empty husk."

He now decided to go back, to the monastery where he had been ordained, where Anselmo first came to serve him and where he now lay buried. Mario visited the shady graveyard every day. One afternoon the Superior came unexpectedly and found the Bishop kneeling beside Anselmo's grave. As Mario rose the Superior asked him, "Well, my son, are you praying that eloquence may be restored to you?" No, Father I ask for a greater blessing — Humility."

— *I. P. T.*

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB/100125/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 26th June, 1981.